மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குன்னம்

அசல் வழக்கு எண். 652 /2021

**2023–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 15 ம் நாள் புதன் கிழமை** வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய PW–2 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. கோ. லோகநாதன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பழனிமுத்து | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : மகாலிங்கம் | வட்டம் | : குன்னம் |
| கிராமம் | : அத்தியூர் | சமயம் | : – |
| சாதி | : – | வயது | :57 /2023 |

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1) நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள ஆவணத்தில் என்ன எழுதி இருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியும். அதில் தாவா சொத்திற்கு கீழ் புரம் எனக்கு 8 சென்ட் நிலம் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிடப்பிட்டுள்ளேன். மேற்படி இடத்திற்கு உரிரய சர்வே எண்ணோ நான்கெல்லையோ யரிடம் இருந்து கிரயம் பெறப்பட்டது எப்போது கிரயம் பெறப்பட்டது என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என்னுடைய உறுதி மொழி ஆவணத்தில் 4 வது பாராவில் சொல்லப்பட்ட நபர்களில் யார் யாரை பார்த்துள்ளேன் என்றால் பொன்னுசாமி, சிற்றம்பலம், அய்யாதுரை, அசலாம்பாள் , சாலையம்மாள் ஆகியோரை தெரியும் , அவர்கள் எனது உறவினர்கள் அல்ல.
2) எனது பூரிவீகம் அத்தியூர் அல்ல வாகையூர் என்றால் சரிதான். அத்தியூருக்கும் வாகையூருக்கும் சுமார் 10 கி.மீதூரம் இருக்கும். எனது தாத்தா அத்தியூருக்கு வந்தாரன்குடி என்றால் சரிதான். நான் முதன்மை வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள அளவுகள் எல்லாம் வாதி சொல்லிதான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அந்த அளவுகள் சரியா தவறா என்பது குறித்தும் ஆவணங்களை பார்வையிட்டதாக நான் குறிப்பிடவில்லை. ஆவணங்கள் இருக்கா இல்லையா என்பது குறித்து எனக்கு தெரியும்.
3) வாய் மொழியாக பாகம் பிரிக்கப்பட்டதாக என்னுடைய முதன்மை வாக்கு மூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான், மேற்படி பாகம் எந்த தேதியில் யார் முன்னிலையில் ஏற்பட்டது என்பது குறித்து நான் வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தாவா சொத்திற்கு கீழ்புறம் 8 சென்ட் நிலம் எனக்கு உள்ளதாக வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் ஆனால் அது எனது அனுபவத்தில் இருப்பதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான் மேலும் அந்த 8 சென்ட் இடத்தில் நான் என்ன பயிர் செய்தேன் என்ற விபரத்தையும் நான் வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வாதிகள் அவர்களுக்கு

WWW.LAWNOTE.IN

பிரிக்கப்பட்ட இடத்தில் அனுபவத்தில் உள்ளார்களா என்பது குறித்தும் என்ன பயிர் செய்தார்கள் என்பது குறித்தும் எனது முதன்மை வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

4) மேற்படி வாதி பிரதிவாதியின் பெயரில் காவல் நிலையத்திலும் மக்கள் நீதிமன்றத்திலும் புகார் கொடுக்கும் போது நான் அவருடன் சென்றிருந்தேன் என்றால் சரிதான். தாவா சொத்திற்கு கீழ்புறம் எனக்கு சொத்து இருப்பதாகவும் வாதிக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் இந்த வழக்கு தாவா சொத்து அனுபவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல.

Taken court by in open court read
and to the witness and admitted by
the witnesses to be correct.

District Munsif–cum–Judicial
Magistrate, Kunnam.

DMCJM KUNNAM